# செந்தமிழ்

தொகுதி : 95 திருவள்ளுவர் ஆண்டு 2032 ஏப்ரல் 2001 பகுதி : 4

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி
தலைவர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக்
துணைத்தலைவர்

| | |
|---|---|
| திரு.இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர்.ந.சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு.க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு.அ. சாமிஜயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர் . மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். எஸ்.எம். கமால்
பேரறிஞர். ஈ.கி.இராமசாமி
பேரறிஞர். சே.அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்
திரு.வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர்

**இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

# பொருளடக்கம்


1. அன்பின் வழியது உயிர்நிலை

க.சி. அகமுடைநம்பி ............ 111

2. இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சனை

பா. சூரிய நாராயணன் ............ 126

3. பைதிரம் - ஒரு குறிப்பு

டாக்டர்.அ.மா. பரிமணம் .......... 136

4. வீட்டுநிலை எய்திய வாழைக்கனி

இரா. இளங்குமரன் ............ 147

# அன்பின் வழியது உயிர் நிலை

க.சி. அகமுடை நம்பி

பொதுவாக ஓர் உயிர் இன்னோர் உயிருடன் கொள்கின்ற நெருக்க உணர்வை அன்பு என்று சொல்லுகிறோம். ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையில் ஏற்படுகின்ற அன்பு, உடல் அளவிலும் நெருக்கத்தை நாடுகின்ற முறையில் இருந்தால், அதனைக் காதல் என்று தமிழில் குறிப்பிடுகிறோம். ஆங்கிலத்தில் இந்த வேறுபாட்டை உணர்த்தக்கூடிய ஒரு தனிச்சொல் இல்லை. அனைத்து நெருக்க உணர்வுகளும் (LOVE) என்ற ஒற்றைச் சொல்லில் அடங்கியாக வேண்டியுள்ளது. இந்த இடத்தில் , ஆங்கிலம் குறையுடைய மொழியே என்று சொன்னால், அது தவறாகாது. தமிழர் வாழ்வு ஆங்கிலேயர் வாழ்வைவிடப் பண்பாட்டுடன் விளங்கியது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆங்கிலத்தில் பெரு வழக்காகவுள்ள இந்த (LOVE) என்ற சொல்லை அன்பு என்றும் காதல் என்றும் மொழி பெயர்க்கலாம் எனும்போது, அன்பு என்று சொல்ல வேண்டிய இடத்தில் காதல் என்றோ, காதல் என்று சொல்ல வேண்டிய இடத்தில் அன்பு என்றோ குறிப்பிட்டாலும் அதில் தவறில்லை. உலக வழக்கில் இரண்டு சொற்களும் ஒரு பொருள் குறித்தவையே. அன்பு என்ற சொல்லில் காதல்அடங்கும், காதல் என்ற சொல்லில் அன்பு அடங்கும்.

அன்புக்கு ஒரு தனி அதிகாரத்தையும், அன்பு பண்பட்டுக் கனிந்து உருவாகின்ற அருளுக்கு ஒரு தனி அதிகாரத்தையும் வள்ளுவர் வழங்கியுள்ளார். ஆனால் அன்பு என்பது யாது என்ற வினாவுக்கு, இதுதான் அன்பு என்று திட்டவட்டமாக நம்மால் விடை காண முடிகிறதா? அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? என்று வள்ளுவர் வியப்புத் தெரிவிக்கிறார். அன்புடையார் தம் உடலையும் கூடப் பிறர்க்கு உரிமையாக்கிடத் தயங்கமாட்டார் என்றும், அன்பு ஆர்வப் பெருக்கை உண்டாக்கும் என்றும் சுட்டிக் காண்பிக்கிறார். அப்படியானால் இந்த அன்பு என்பது யாது? அரிய உயிர்க்கு உடலுடன் அமைந்துள்ள இந்தத் தொடர்பு,

நாம் அன்புடன் இயங்குவதற்கே என்றும், உலகில் இன்பமுடன் வாழுகின்றவர் எய்துகின்ற சிறப்பெல்லாம் அன்பில் தோய்ந்து பெற்ற பயனாகும் என்றும், அன்பின் வழிப்பட்டதே நம் உடலின் உயிர்நிலை என்றும் வள்ளுவர் விரித்துரைக்கிறார்.

அன்பின் இயக்கத்தை, அவ்வியக்கத்தின் விளைவுகளை, விளைவுகள் ஏற்படுத்துகின்ற சிறப்புகளையெல்லாம் வள்ளுவர் விதந்தோதுகிறார்.ஆயின்,அன்பு என்பது யாது என்ற வரையைறையை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறதா? இதுதான் அன்பு என்று நாம் (DEFINITION)கருதிக்கொண்டிருப்பது மெய்மையில் அன்புதானா?

இதனைப் புரிந்து கொள்வதற்கு வள்ளுவத்துடன், மெய்ப்பொருளறிஞர் ஜே.கிருஷ்ணமூர்த்தியின் கருத்துக்களையும் இணைத்து ஆய்ந்து பார்த்தால் ஒரு தெளிவு பிறப்பதைக் காணலாம். பல்வேறு தருணங்களில், பல்வேறு இடங்களில் ஜே.கிருஷ்ணமூர்த்தி அன்பைப்பற்றி அடிக்கடி பேசியிருக்கிறார்.

கடவுள் என்ற சொல்லை வள்ளுவர் பயன்படுத்தவில்லை என்பதை நாம் அறிவோம்.மெய்ப்பொருளறிஞர் ஜே.கிருஷ்ணமூர்த்தியும் கடவுள் என்ற சொல்லை ஏற்க மறுத்தவர். ஆனால் வள்ளுவரைப்போல், இறையியல் வாழ்வை மிக ஆழமாகச் சிந்தித்தவர். அவர் அன்பைப் பற்றிய அவரது கருத்தோட்டங்களை நாம் புரிந்து கொண்டால், அன்பைப் பற்றிய வள்ளுவர் கூற்றுகளை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

## அன்பு என்பது யாது ?

அன்பு என்றால் என்ன? இந்த அன்பு என்ற சொல்லில், இதற்கு மாறான பல பொருள்கள் சேர்க்கப்பட்டு அதிகமாக இச்சொல் சுரண்டப்படுவதால் இயல்பான முறையில் இச்சொல்லைப் பயன்படுத்த நாம் தயங்குகிறோம். அன்பைப் பற்றி ஒவ்வொருவரும் பேசுகிறார்கள். பருவ இதழ், நாளிதழ் ஒவ்வொன்றும், சமயப் போதகர் ஒவ்வொருவரும் அன்பைப் பற்றி ஓயாமல் பேசி வருகிறார்கள்.நாட்டை நான் நேசிக்கிறேன்,

ஒரு புத்தகத்தை நேசிக்கிறேன். அந்த மலையை நேசிக்கிறேன், கடவுளை நேசிக்கிறேன் என்றெல்லாம் சொல்லிக் கொள்கிறோம். ஆக, அன்பு என்பது ஒரு கருத்துருவா? அப்படியென்றால் அதனைப் பண்படுத்தி. வளர்த்துப் பேணிப் பாதுகாக்கலாமா? நம் விருப்பப்படி மாற்றியமைத்துக் கொள்ளலாமா?

கடவுளை நேசிக்கிறேன் என்று நாம் சொல்லும்போது, அதன் பொருள் என்ன? நமது சொந்தக் கற்பனையின் நீட்சியை, அதாவது நம்மையே உயர்ந்த, தூய்மையான என்று நாம் கருதுகின்ற, மதிப்புக்குரிய ஒரு தன்மையை வரித்துக்கொண்டு நம்மை நாமே நேசித்துக்கொள்கிறோம் என்பது தானே அதன் பொருள்? நான் கடவுளை நேசிக்கிறேன் என்பது அப்பட்டமான அறியாத்தனமாகும். நாம் கடவுளை வழிபடும் போது நம்மை நாமே வழிபட்டுக் கொள்கிறோம். இங்கு அன்பில்லை.

மனித இனத்தின் அன்பு என்ற இந்தப் பொருள் பற்றிய தெளிவு நமக்கு இல்லாதிருப்பதால், ஒரு வகையான கருத்துக்கூறில் (Abstraction) புகுந்து கொள்கிறோம். மனித வாழ்வின் இக்கட்டான நிலைமைகள், சிக்கல்கள், வேதனைகள் அனைத்திற்கும் அன்பே இறுதியான தீர்வாகலாம். ஆனால், இந்த அன்பு என்பது எது என்பதை நாம் எப்படி அறிந்து கொள்ளப்போகிறோம்? தேவாலயம் ஒரு விளக்கம் தருகிறது ; சமூகம் இன்னொரு விளக்கம் தருகிறது. இவற்றிலும் அவ்வப்போது பலவாறான விலகல்கள் (deviation) புரட்டல்கள் (preversion)

ஒருவரை வணங்கிப் போற்றுவது, ஒருவருடன் படுத்துறங்குவது, உணர்ச்சிப் பெருக்கைப் பங்கிட்டுக் கொள்வது, தோழமையைப் பெறுவது போன்றவற்றையே அன்பு என்று கொள்கிறோம். இதுவே அன்பின் வடிவமாக நம் மனத்தில் இருந்து வருகிறது. அன்பு என்பது ஒருவருக்குரியதாக, புலன் உணர்வு சார்ந்ததாக, ஒரு வரம்புக்கு உட்பட்டதாக ஆகியிருப்பதால், இதைவிட அன்பு உயர்ந்தது என்று சமயங்கள் போதிக்கின்றன. மனித இனத்தின் அன்பு என்று கூறப்படுகின்ற இதிலே, இன்பம், போட்டி, பொறாமை, உடைமையாக்கிக் கொள்கிற விருப்பம் போன்றவை சேர்ந்திருப்பதால், இதன் மிகப்பெரிய சிக்கலைக்

கருதிப் பார்த்து, இதனினின்றும் மாறுபட்ட, வேறு வகையான அன்பு இருத்தல் வேண்டும் என்றும், அது தெய்வீகமானதாகவும், அழகானதாகவும், தொடமுடியாத ஒன்றாகவும் இருத்தல் வேண்டும் என்றும் சமயங்கள் கூறுகின்றன.

உலகம் முழுவதும் உள்ள ஆன்மீக வாதிகள் எனப்படுவோர் ஒரு பெண்ணைப் பார்ப்பது முற்றிலும் தவறானது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். பாலியல் உறவில் ஒருவர் ஈடுபட்டால் கடவுளை அவர் நெருங்க முடியாது என்று அவர்கள் கருதுகிறார்கள். இந்த ஆன்மீக வாதிகளிடம் பாலியல் உணர்வு மேலோங்கியிருக்கும். ஆனாலும், அவர்கள் அதனைத் தவிர்க்க முயல்கிறார்கள். பாலுணர்வை மறுக்கின்ற வழிமுறையாக அவர்கள் தம் கண்களை மூடிக்கொள்கிறார்கள். நாவை அடக்கிக் கொள்கிறார்கள். மண்ணுலகின் அழகையெல்லாம் அவர்கள் மறுத்து ஒதுக்கிறார்கள். தம் மனத்தையும் இதயத்தையும் வறட்சியாக வைத்துக்கொள்ளும் இவர்கள், ஈரமற்ற மனிதர்கள், அழகுப் பெண்களுடன் தொடர்புடையதாக இருப்பதால், இவர்கள் அழகையே மறுக்கிறார்கள்.

அன்பைப் புனிதமானது, புனிதமற்றது என்றோ, மனித அன்பு, தெய்வீக அன்பு என்றோ பிரிக்க முடியுமா? அல்லது, அன்பு என்பது பிரிக்க முடியாத ஒன்றுதானா? அன்பு, ஒருவரைப் பொருத்ததா, அல்லது பலருக்கும் உரியதா? நான் உங்களை நேசிக்கிறேன் என்று சொன்னால், அந்த அன்பு மற்றவர்களை விலக்கிவிடுகிறதா? அன்பு, தனது (Presonal) என்றளவில் உள்ளதா அல்லது பொதுவானதா? நீதிநெறி வழிப்பட்டதா அல்லது அதற்கு மாறானதா? உணர்ச்சியா அல்லது மன எழுச்சியா? இன்பமா அல்லது விருப்பமா?

அன்பு என்பது எது என்பதைக் கண்டறிவதற்கு, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அதற்கு ஏற்பட்டுள்ள இறுக்கத்திலிருந்து அதனை விடுவிக்க வேண்டும். அன்பு எதுவாக இருத்தல் வேண்டும் (encrustation) அல்லது இருத்தலாகாது என்பதற்கான கருத்துக்களையும் கொள்கைகளையும் நாம் அகற்றிவிட வேண்டும். எந்தப் பொருளையும் அது எப்படி உள்ளது என்றும், எப்படி இருத்தல் வேண்டும் என்று பிரிப்பது,

வாழ்வை ஏமாற்று முறையில் எதிர் கொள்வதாகும்.

இப்போது, 'அன்பு என்று நாம் சொல்லுகின்ற இந்த எரிதழலை நாம் எப்படிக் காண்போம்? அதனைப் பிறருக்கு எப்படி வெளிப்படுத்துவது என்பதையன்று, அன்பு அதனளவில் என்ன பொருள்படுகிறது என்பதை நாம் எப்படிக் காணப்போகிறோம்? . தேவாலயமும், சமூகமும், பெற்றோர்களும் நண்பர்களும், புத்தகங்களும் அன்பைப் பற்றி என்னென்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் முதலில் நாம் அகற்றிவிட வேண்டும். மனித இனம் முழுவதையும் சம்பந்தப்படுத்துகின்ற மாபெரும் சிக்கல் இது. இதனைக் குறித்து ஆயிரம் விளக்கங்கள் உள்ளன. அவற்றுள் ஒரு விளக்கத்துக்கு அவ்வப்போது, நம்முடைய விருப்பத்துக்கும் நுகர்வுக்கும் ஏற்ப, ஆட்படுகிறோம். ஆகவே, அன்பை நாம் அறிந்து கொள்வதற்கு நம்முடைய விருப்பங்களிலிருந்தும், சார்புகளிலிருந்தும் முதலில் நம்மை நாமே விடுவித்துக் கொள்ள வேண்டும்.

சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய் (குறள் 359)

மெய்யான அன்பைக் காண்பதற்குப் பொய்மை வழிப்பட்ட சார்புகளிலிருந்து முதலில் நம்மை நாமே விடுவித்துக் கொள்ள வேண்டும் என்ற குறிப்பை இக்குறள் மூலம் பெறுகிறோம்.

வெவ்வேறு விருப்பங்களால் பிளவுபட்ட நிலையில் நாம் குழம்பிக் கிடக்கிறோம். ஆகவே நாம் நமக்குள் சொல்லிக் கொள்ள வேண்டுவது முதலில் நீ உன்னுடைய குழப்பங்களையெல்லாம் அகற்றி, உன்னை நீயே தெளிவுபடுத்திக்கொள். எவையெல்லாம் அன்பல்ல என்பதை தெரிந்து கொள்வதன் மூலம், அன்பு எது என்பதை நீ கண்டு கொள்ளக் கூடும்.

நாட்டின் மீதுள்ள உங்கள் அன்புக்காகப் பகைவரைக் கொல் என்கிறது அரசு. இஃது அன்பா? கடவுள் மீதுள்ள உங்கள் அன்புக்காக பாலியல் உணர்வை அகற்றிவிடு என்கிறது சமயம் இஃது அன்பா? விருப்பம் அல்லது அவா என்பது அன்பா? நம்மில் பெரும்பாலோர்க்கு விருப்பமே அன்பாக உள்ளது. புலன்கள் வழிப் பெறுகின்ற இன்பம்,

பாலியல் உறவில் பெறுகின்ற இன்பம், இந்த இன்பத்துக்கான விருப்பம் இதுவே நமக்கு அன்பாகப் படுகிறது.

**கணவன் மனைவி உறவு**

பாலியல் உறவு அந்தக் கணத்தில் தன்னை இழக்கும் நிலையை அளிக்கிறது அதன் பிறகு நமது குழப்பமான நிலைக்குத் திரும்பி விடுகிறோம் ஆகவே, பாலுணர்வில் பெறுகின்ற அந்த நிலையை மீண்டும் மீண்டும் பெற்றிட அவாவுகின்றோம். ஏனெனில், அந்தக் கணங்களில், தொல்லைகள், கவலைகள், சிக்கல்கள், தான் என்ற தன் முனைப்பு, இவையெல்லாம் இருப்பதில்லை.இங்கு, ஜே.கிருஷ்ணமூர்த்தி என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம். அவர் கூறுகிறார்."நீங்கள் உங்கள் மனைவியை நேசிப்பதாகச் சொல்லுகிறீர்கள். அந்த அன்பில் பாலுறவின்பம் உள்ளது. உங்கள் குழந்தைகளைப் பேணுவதற்கும், சமைப்பதற்கும் வீட்டில் ஒருவரைப் பெற்றுக் கொண்டுள்ள இன்பம், உங்களுடைய அந்த அன்பில் உள்ளது. உங்கள் மனைவியை நீங்கள் சார்ந்திருக்கிறீர்கள். அவர் தனது உடலை உங்களுக்கு வழங்கியிருக்கிறார். உணர்வெழுச்சியைத் தந்திருக்கிறார். ஒரு பாதுகாப்புணர்வையும் இனிய வாழ்வையும் அவர் உங்களுக்கு அளிக்கிறார். பின்னர், ஒரு கட்டத்தில், அவர் உங்களை விட்டு விலகிச் செல்கிறார். உங்களிடம் சலிப்பு ஏற்பட்டு இன்னொருவருடன்அவர் சென்று விடுகிறார். அப்போது உங்களது உணர்வுக் களம் நிலை குலைந்து போகிறது. நீங்கள் சிறிதும் விரும்பாத இந்தத் தடுமாற்றம் பொறாமையாக வெளிப்படுகிறது. அதில் மனவேதனை அச்சம், வெறுப்பு, வன்முறை போன்றவை இடம் பெறுகின்றன.நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?என்னுடையவளாக நீ இருக்கும்வரை நான் உன்னை விரும்புகிறேன். நேசிக்கிறேன். ஆனால், எனக்குரியவளாக நீ இல்லை என்றாகிவிடுகின்ற அந்தக் கணத்தில் உன்னை நான் வெறுக்கிறேன். எனது பாலியல் வேட்கைக்கும் மற்ற தேவைகளுக்கும் உன்னை நான் சார்ந்திருக்கலாம் என்கின்ற நிலை இருக்கும்வரை உன்னை நான் நேசிக்கிறேன். ஆனால், எனக்குத் தேவையானவற்றை வழங்குவதை நீ நிறுத்திக் கொள்கின்ற அந்தக் கணத்திலிருந்து உன்னை நான் விரும்ப மாட்டேன் என்று சொல்லுகிறீர்கள். ஆக, இங்கே உங்களிருவர்க்கிடையே பிரிவும் பகையும் ஏற்படுகிறது. இந்த நிலைப்பாட்டில் அன்பு ஒருபோதும் இருப்பதில்லை.

"ஆனால், இத்தகு முரண்பாடுகளும் சச்சரவுகளும் உருவாவதற்குக் காரணமான எண்ணங்கள் எழாமல், உங்கள் மனைவியுடன் நீங்கள் வாழ முடியுமானால், அப்போது ஒருவேளை, ஆம், ஒருவேளை அன்பு என்பது யாது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம். அந்த நிலையில் நீங்களும் உங்கள் மனைவியும் முழுமையான விடுதலையுணர்வைப் பெற்றவராவீர்கள். அல்லாமல், உங்களுடைய அனைத்து இன்பங்களுக்கும் நீங்கள் உங்கள் மனைவியைச் சார்ந்திருப்பீர்களாயின், அவருக்கு நீங்கள் அடிமையாகிறீர்கள் ".

இவ்வாறு ஒருவர் தன் மனைவிக்கு அடிமையாவதையே வள்ளுவர் பெண்வழிச்சேறல் என்ற ஒரு தனியதிகாரத்தில் குறிப்பிட்டுச் சாடுகிறார்."பெண் சேர்ந்தாம் பேதமை" என்கிறார். ஒருவர் இன்னொருவரிடம் அன்பு செலுத்துகிறார் என்றால், விடுதலையுணர்வு உள்ளவராக, அந்த இன்னொருவரிடமிருந்து மட்டும் விடுபட்ட நிலை என்றில்லாமல், தனக்குத்தானே விடுபட்டவராக, உரிமையுணர்வு உள்ளவராக இருத்தல் வேண்டும். இங்கு, ஆண் பெண் என்ற வேறுபாடில்லை. கணவன், மனைவி ஆகிய இருபாலருக்கும் உரிய அன்பின் நிலைப்பாடு இதுதான் என்பது திருவள்ளுவர், ஜே.கிருஷ்ணமூர்த்தி இருவரது கருத்துமாகும்.

ஒருவர் இன்னொருவருக்குச் சொந்தமாக இருக்கின்ற நிலை, உளவியல் அளவில் ஒருவர் இன்னொருவரால் பேணப்படுகின்ற நிலை இவற்றிலெல்லாம் கவலை, அச்சம், பொறாமை, குற்றவுணர்வு போன்றவை ஊடுருவி விடுகின்றன. மனத்தில் அச்சம் இருக்கின்ற நிலையில் அங்கு அன்பு இராது. கவலையால் அலைக்கழிக்கப்படுகின்ற மனம், ஒருபோதும் அன்பை அறியாது. உணர்ச்சிவயப்படுகின்ற நிலைக்கும், மனம் கிளர்ச்சியுறுகின்ற நிலைக்கும் அன்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இன்பம், விருப்பம் ஆகியவற்றின் மீது அன்புக்குத் தொடர்பில்லை.

கடந்த காலத்தைச் சார்ந்த எண்ணங்களின் விளைபொருளன்று

அன்பு. அன்பை எண்ணம் வளர்த்தெடுக்க இயலாது. அன்பை இடைமறித்துப் பொறாமையில் கிடத்த முடியாது. ஏனெனில், பொறாமை இறந்த காலத்தைச் சேர்ந்தது. அன்போ, எப்போதும் இயங்கிக் கொண்டுள்ள நிகழ்காலமாகும். நான் "அன்பு செலுத்துவேன்" என்று சொல்வதிலோ,நான்"அன்பு செலுத்தியிருக்கிறேன்" என்று சொல்வதிலோ அன்பு இருப்பதில்லை. அன்பை ஒருவர் அறிவாராயின், யாரையும் அவர் பின்பற்ற மாட்டார். அன்பு கீழ்ப்படியாது. ஒருவர் அன்பு செலுத்தும் போது, தன் மதிப்புக்கோ, மதிப்புக் குறைவுக்கோ அங்கு இடமில்லை.

மற்றவரிடம் வெறுப்பு, பொறாமை, சினம் போன்றவை இல்லாமல், அவருடைய செயல்களிலோ எண்ணங்களிலோ தலையிடாமல், அவரைக் கண்டிக்காமல், ஒப்பிடாமல் அவரை நேசித்தல் என்பதன் பொருளை நாம் அறிவதில்லை. எங்கு அன்பு உள்ளதோ அங்கு ஒப்பிடுதல் இராது.

இனையர் இவர்எமக்கு இன்னம் யாம்என்று
புனையிலும் புல்லென்னும் நட்பு (குறள் 790)

என்ற குறளின் மெய்ப்பொருள், அன்பின் தன்மையை வெளிப்படுத்தி நிற்கிறது. நண்பர் இவர், எமக்கு இத்தகையர், யாம் அவர்க்கு இத்தகையர் என்று ஒப்பீடு செய்து கூறுவதாயினும், அந்த நட்பு திரிந்துவிடும் என்பது இதன்பொருள். நெஞ்சார, முழுமனத்துடன், முழுமையான உடலுடன், ஒருவர் தனது முழுமையான இருத்தலுடன் மற்றொருவரை நேசிக்கும்போது, அங்கு ஒப்பிடுதல் இருக்கமுடியாது. அன்பில் ஒருவர் தன்னையே இழந்துவிடுகின்ற நிலையில், மற்றவர் அங்கு இருப்பதில்லை.

## பொறுப்புணர்வு அன்பாகாது

பொறுப்பு, கடமை என்பனவற்றில் அன்புக்குத் தொடர்பில்லை. இந்தச் சொற்களை அன்புடன் சேர்க்க முடியாது. கடமை காரணமாக ஒருவர் ஒரு செயலைச் செய்யும்போது, அந்தச் செயலை அவர் நேசிப்பதில்லை. மனிதனைக் கட்டுப்படுத்துகின்ற கடமை என்ற அமைப்பு அவரைப் பாழ்படுத்துகிறது. அன்பு வீற்றிருக்கும்போது கடமை என்பதற்கோ பொறுப்பு என்பதற்கோ இடம் இல்லை.

பெரும்பாலான பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளின் வளமையான வாழ்வுக்குத் தாமே பொறுப்பானவர்கள் என்று எண்ணிக்கொள்கிறார்கள். குழந்தைகள் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யலாகாது என்று அறிவுறுத்துகின்ற முறையில், தம் குழந்தைகள் எவ்வாறு ஆக வேண்டும், எவ்வாறு ஆகக்கூடாது என்றெல்லாம் அவர்களைக் கட்டுப்படுத்துகின்ற முறையில், பெற்றோர்களின் பொறுப்புணர்வு வடிவம் கொள்கிறது. சமூகத்தில் ஒரு பாதுகாப்பான நிலையைத் தம் குழந்தைகள் பெற வேண்டும் என்று பெற்றோர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் கொண்டுள்ள பொறுப்புணர்வு என்பது அவர்கள் போற்றுகின்ற மதிப்பான வாழ்வின் ஒரு பகுதியே. எப்போதும் அவாவி நிற்கின்ற நடுத்தர வகுப்பினராக ஆவதிலேயே அவர்கள் குறியாக உள்ளனர். சமூகத்துக்கு இசைவாகத் தம் குழந்தைகளை அவர்கள் உருவாக்கும்போது, போரையும் போராட்டத்தையும் மிருகத்தன்மையையுமே தொடர்ந்து நீடிக்கச் செய்பவராகின்றனர். அதனை அக்கறை என்றோ அன்பு என்றோ கூற முடியாது.

அக்கறையுடன் பேணுதல் என்றால், ஒரு மரக்கன்றை அல்லது செடியை, அதற்கு மிக இசைவான மண் வகையைத் தேர்ந்தெடுத்து நீர் ஊற்றி, மென்மையான முறையில் அதனைப் பேணிப் பாதுகாத்து, எப்படித் தன்னுரிமையுடன் வளர்வதற்கு வாய்ப்பளிக்கிறோமோ, அப்படிக் குழந்தைகள் வளர்வதற்கு நாம் துணையாக வேண்டும். அப்படியில்லாமல், சமூகத்துக்கு இசைவாகக் குழந்தைகளை உருவாக்கும்போது அவர்களை நாம் அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்கிறோம். குழந்தைகளை நாம் மெய்யாகவே நேசித்திருந்தால், எந்தப் போரையும் நாம் காண நேர்ந்திருக்காது.

## தன்னிரக்கம் அன்பாகாது

நாம் நேசித்து வருகிற ஒருவரை இழக்க நேரும்போது கண்ணீர் வடிக்கிறோம். அந்தக் கண்ணீர் நமக்காகவா அல்லது இறந்தவருக்காகவா? நாம் அதிகமான பாசத்தை முதலீடாகச்

செலுத்தியிருந்த ஒருவரை இழந்து விட்டதால் நாம் அழுகிறோம். நாம் நமக்காகவே அழுகிறோம். நாம் தனியராக விடப்பட்டதால், நாம் இனிமேல் இந்தளவு வலிமையுடன் இருக்க முடியாது என்பதால் நமது தீயூழ் பற்றியும் எதிர்மறைச் சூழல் பற்றியும் குறைபடுகின்ற முறையில் நாம் அழுகிறோம். இது அன்பாகுமா? தன்னிரக்கம் அன்பாகாது.

துயரம் என்பது நாமே உருவாக்கிக் கொள்வது. எண்ணத்தால் துயரம் உருவாக்கப்படுகிறது. காலத்தின் உருவாக்கம் இது. என்னை எனது கண்ணீரை, எனது குடும்பத்தை, எனது நம்பிக்கையை, எனது சமயத்தை என்று வெளிப்படுகின்ற இந்த அருவருப்பான எளிய பொருளாகிய நான் , எனது என்பதன் முழு அமைப்பையும் நமக்குள், ஒரு கணத்தில் நாம் காணமுடியும். நம் மனத்தளவிலன்றி நெஞ்சினால், இதயத்தின் அடித்தளத்திலிருந்து இதனைப் பார்க்கும் போது, துயரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்குரிய சாவி நமக்கக் கிடைக்கிறது.

துயரமும் அன்பும் இணைந்து செல்ல முடியாது. ஆனால், கிறித்துவ உலகில், துன்பப்படுவதையே மேலான குறிக்கோள் நெறியாக்கி, அதனைச் சிலுவையில் வைத்து வணங்கினர். இதன் பொருள் என்ன? என்னவெனில், இந்தச் சிலுவையென்ற குறிப்பிட்ட வழியிலன்றி, வேறு எந்த வழியிலும் துன்பத்திலிருந்து மனிதன் மீளமுடியாது என்பதாம். சரண்டல் தனமான மதச் சமூகத்தின் ஒரு தந்திரமான அமைப்பு இது. அன்புக்கு இங்கே இடமில்லை.

## அன்புக்கு மாறுபட்ட கூறுபாடுகள்

இதுவரை கூறியவற்றிலிருந்து நமக்குத் தெரிவது என்ன? அச்சம் அன்பில்லை. சார்பு நிலை அன்பில்லை. எனது என்று உரிமை பாராட்டுவதும் ஆதிக்கம் செலுத்துவதும் அன்பாகாது. பொறுப்புணர்வு அல்லது கடமையுணர்வு அன்பாகாது. தன்னிரக்கம் அன்பாகாது. நேசிக்கப்படாமலிருப்பதால் ஏற்படுகின்ற வெந்துயரம் அன்பாகாது. வெறுப்பின் எதிர்நிலை அன்பாகாது. இவை எல்லாவற்றையும்

நீக்கிவிட்டால், வலுக்கட்டாயமாக இல்லாமல், பல நாட்களாக இவைகளில் படிந்துள்ள தூசினை மழைநீர் எப்படி கழுவித் தூய்மையாக்கிவிடுகிறதோ அதே போல் நம் மனத்தைக் கழுவித் தூய்மையாக்கினால், மனிதன் பெற வேண்டுமென்ற ஏங்குகிற அன்பு எனும் வியன்மலரை நாம், ஒருவேளை காணலாம்.

நாம் அன்பைப் பெறாவிட்டால், அன்பு வெள்ளத்தால் நாம் நிரப்பப்படாவிட்டால், உலகம் பேரழிவுக்கு உள்ளாகும். மனித இனத்தின் ஒற்றுமை மிகவும் முக்கியமானது. அதற்கு அன்பு தான் ஒரே வழி என்பதை அறிவார்ந்த முறையில் நாம் தெரிந்து கொண்டுள்ளோம். ஆனால் அன்பு செலுத்துவது எப்படி என்பதை யார் நமக்குக் கற்றுக் கொடுக்கப்போகிறார்கள்? அன்பை யாராவது நமக்கு விளக்கிக் கூறினால், அது அன்பாகாது. நான் அன்பைப் பயிற்சி செய்வேன், கீழே அமர்ந்து நாட் கணக்காக அதைப் பற்றிச் சிந்திப்பேன், பரிவுடன் மென்மையாக இருப்பது குறித்துப் பயிற்சி மேற்கொண்டு, மற்றவர்களின் நலத்தில் கருத்துச் செலுத்துவேன் என்று ஒருவர் சொல்ல முடியுமா? அப்படியென்றால் அன்பு அவரைவிட்டுச் சென்றுவிடும். ஏதோ ஒரு வழிமுறையைப் பயிற்சி செய்து, அன்பைக் குறித்த ஓர் அமைப்பு முறையைப் பழக்கப்படுத்தி, ஒருவர் அளவற்ற திறமைசாலியாகப் பரிவு மிக்கவராக ஆகலாம். அல்லது வன்முறைக்கு எதிர் நிலையில் ஒருவர் தன்னைத் தானே இருத்திக்கொள்ளலாம். ஆனால் அதற்கும் அன்புக்கும் எவ்விதத் தொடர்பும் இராது.

## அன்பற்ற பாலையாக இவ்வுலகம்

ஈரப்பதமே இல்லாமல் விரிசல் கண்ட பாலைவனம் போல் உள்ள இந்த உலகில் அன்பு என்பதே இல்லை. ஏனெனில் இங்கு இன்பமும் ஆசையுமே பெரும்பங்கு வகிக்கின்றன. அன்பற்ற அன்றாட வாழ்க்கையில் பொருளே இல்லை. ஒருவரது உள்ளத்தில் அன்பு இல்லாத நிலையில் அவரது வாழ்க்கை எப்படி அமையும். வறட்சிமிகு பாலை நிலத்தில் பட்டுப்போன ஒரு மரம் தளிர்ப்பது இயலுமா? அதுபோல்தான் பயனற்றுப்போகும் (குறள் 78). அகத்தில்

அன்பில்லாதவன், புறத்தில் எவ்வளவு செல்வம் இருந்தாலும் அவனது வாழ்வு, இன்பச்சிறப்பை ஒருபோதும அவனுக்கு வழங்காது.

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு (குறள் 79)

அன்பு எனும் அகத்துறுப்பு இல்லாதவர்க்குப் புறத்துறுப்புகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றால் அவருக்கு என்ன பயன்? அதே போல், நிலபுலம், கோட்டை, கொத்தளம், கோடிக்கணக்கில் பணம் என்று எவ்வளவு வளம் இருப்பினும், அன்பை அகத்தில் பெற்றிராத மனிதனுக்கு, மெய்யான பயன் எதுவும் இல்லை. அன்பு இல்லாதபோது, அருவருப்பும் வறட்சியுமே நிலைபெறும். அன்பு உள்ளவரிடம் அழகும் சேர்ந்திருக்கும். அன்பும் அழகும் இருக்கும்போது, ஒருவர் செய்வதெல்லாம் சரியாகவே இருக்கும். அவரது எந்தச் செயலும் ஒழுங்கமைதியுடன் அமையும். எப்படி அன்பு செலுத்துவது என்பதை நாம் அறிந்து கொண்டால், நம் விருப்பப்படி நாம் எந்தச் செயலையும் செய்யலாம். ஏனெனில், அது மற்ற எல்லாச் சிக்கல்களையும் தீர்த்துவிடும்.

## அன்பை எதிர்கொள்வோம்

நாம் இப்போது சென்று சேரவேண்டிய இலக்கை நெருங்கி விட்டோம். ஒரு குறிப்பிட்ட ஒழுகலாறு இல்லாமல், எண்ணம் என்றில்லாமல், வன்முறையைக் கையாளாமல், எந்தப் புத்தகமும் இல்லாமல் மனம் அன்பின்பால் வந்து சேர இயலுமா? கதிரவன் மறைகின்ற அழகுக் காட்சி நம்முன் வருவதுபோல் அன்பு என்ற வியன்மலர் வரக்கூடுமா?

இங்கே ஒரு குறிப்பான பொருள் இன்றியமையாத முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறுகிறார் ஜே.கிருஷ்ணமூர்த்தி. அது, உள்நோக்கம் இல்லாத மன எழுச்சிபொங்கிவரும் ஆர்வம். கடமையினாலோ, பற்றுதலாலோ விளைகின்ற ஆர்வமன்று. காம உணர்வினால் ஏற்படும் ஆர்வமும் அன்று. மன எழுச்சி என்னவென்று அறியாத ஒரு மனிதன்,

அன்பை ஒருபோதும் அறிந்துகொள்ள மாட்டான் ஏனென்றால். தன்னலத்தை முற்றிலுமாகக் கைவிடும்போது தான் அன்பு அங்கு வந்து தோன்றும். "அன்பு ஈனும் ஆர்வமுடைமை"என்பார் வள்ளுவர். " அது ஈனும் நட்பு எனும் நாடாச்சிறப்பு". அன்பும் நட்பும் நாடிப்பெறுவதல்ல. தேடிப் பெறுவதுமல்ல.

தேடுகின்ற மனம் உணர்வெழுச்சியுடையதன்று. தேடியலையாமல், அன்பை எதிர்கொள்வதே அன்பைக் காணுகின்ற ஒரே வழிமுறை. முயற்சி, அனுபவம் என்றெதுவும் இல்லாமல், எதிர்பார்ப்பு என்பது சிறிதும் இல்லாமல் எதிர் வரக் காண்பதே அன்பு. ஒருவர் காண்கின்ற இந்த அன்பு காலத்தின் பாற்பட்டதன்று. இது ஒருவருக்கு உரியது. பலருக்கும் உரியது.

நறுமணம் மிக்க மலரை முகர்ந்து பார்க்கலாம். நுகராமலே அதனைக் கடந்து செல்லலாம். அந்த மலர் ஒவ்வொருவருக்கும் உரியது. அதனை ஆழமாக நுகர்ந்து பார்க்கின்றவருக்கும், உவகையுடன் உற்றுப் பார்க்கின்றவருக்கும் உரியது. ஒருவர் மலர்த்தோட்டத்தின் அருகில் இருந்தாலும், அப்பால் தொலைதூரத்தில் இருந்தாலும் மலருக்கு ஒன்றுதான். ஏனெனில், நறுமணத்தை நிறைவாகப் பெற்றுள்ள மலர், அதனை ஒவ்வொருவருடனும் பகிர்ந்து கொள்கிறது.

"மலர்மிசை ஏகினான்" என்று வள்ளுவர் கூறுவதை இவ்வாறு புரிந்து கொள்ளலாம். காலத்துக்கு உட்படாத அன்பு எனும் வியன் மலரைப் பெறுபவர் காலங்கடந்த வாழ்வைப் பெற்றவராவார். அன்பு. புதுப்பொலிவுடன் கூடிய புதுமலர். உயிர்ப்புடன் விளங்குவது. அதற்கு நேற்று என்பதோ, நாளை என்பதோ கிடையாது.

எண்ணங்களின் குழப்பத்துக்கு அப்பாற்பட்டது அன்பு. கள்ளங்கபடமற்ற மனம், அன்பு எது என்பதை அறிந்து கொள்ளும். எண்ணம், தன்னைத்தானே அறிகின்ற போது, தன்னைத்தானே அறிகின்ற நிலையில், இயல்பாகவே எண்ணம் முடிவுக்கு வரும். அந்த நிலையில். மனிதன் தியானத்தின் மூலமாகவும், வழிபடுதல் மூலமாகவும்.

உறவுமுறை மூலமாகவும், பாலியல் உறவு மூலமாகவும் ஓயாமல் தேடிப்பெற முயலுகின்ற, தனிச்சிறப்பு வாய்ந்த அன்பைக் காண்பது கைகூடும். அப்போது, அன்புக்கு எதிர்மறை எதுவும் இராது. எந்த முரண்பாடும் இராது.

'நான் இவ்வாறான அன்பைக் காண்பதென்றால், என் மனைவி, மக்கள், குடும்பம் எல்லாம் என்னாவது? அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமே?' என்று நமக்குக் கேட்கத் தோன்றுகிறது. இந்த வினாவுக்கு ஜே.கிருஷ்ணமூர்த்தி கூறும் விடை

இத்தகைய வினாவை நீங்கள் எழுப்பினால், நீங்கள் உங்கள் எண்ணங்களின் ஆளுகைக்கு அப்பால், உங்கள் மனப்பகுதிக்கு அப்பால் செல்லவேயில்லை என்றுதான் கூற வேண்டும். அந்த எல்லைக்கு அப்பால் நீங்கள் ஒரு தடவை சென்றிருந்தால், இத்தகைய வினாவை நீங்கள் ஒருபோதும் எழுப்ப மாட்டீர்கள். ஏனெனில், அன்பு என்பது எது என்பதை, அதில் எண்ணம் எதுவும் இராது என்பதையும், ஆகவே அதற்குக் காலம் இல்லை என்பதையும் நீங்கள் அறிந்தவராவீர்கள். இதனை வசியப்படுத்தப்பட்டதுபோல், ஒரு மந்திர சக்திக்கு ஆட்பட்டு மகிழ்வது போல் நீங்கள் வாசிக்கலாம். ஆனால், எண்ணத்துக்கும் காலத்துக்கும் அப்பால் மெய்யாகவே செல்வது என்பது அதாவது, துயரத்துக்கு அப்பால் செல்வது என்பது அன்பு எனப்படும் வேறொரு பரிமாணத்தைக் கண்டுணர்வதாகும்.

இந்தத் தனிச்சிறப்பு வாய்ந்த நீருற்றுக்கு எப்படிச் செல்வது என்பது உங்களுக்குப் புலப்படவில்லை. அப்படியானால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அறிய மாட்டாத நிலையில் நீங்கள் எதுவும் செய்யமாட்டீர்கள், இல்லையா? ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பீர்கள். உள்முகமாக நீங்கள் முழு அமைதியுடன் வீற்றிருப்பீர்கள். இதன் பொருள் என்ன? நீங்கள் எதையும் தேடிக்கொண்டிருக்கவில்லை. எதையும் விரும்பியறியவில்லை. எதையும் பின்தொடர்ந்து செல்லவில்லை. இவற்றுக்கெல்லாம் உங்களிடம் எந்த மையமும் இல்லை இந்த நிலைதான் அன்பின் இருக்கையாகும். இங்கு மையம் என்று குறிப்பிடுவது, மனித இனத்தின் யான், எனது என்கின்ற செருக்கான நிலைப்பாட்டையே.

யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கும்
உயர்ந்த உலகம் புகும். (குறள் 346)

வானவர் உறைகின்ற உலகைவிட மேலான உலகம், எந்த மையமும் இல்லாமல், வாழுகின்ற மனிதனுக்கு வாய்க்கும் என்கிறார் வள்ளுவர். மனிதனிடமுள்ள யான், எனது என்கின்ற மையம் உயிர்ச்சூழலை நெருங்கவிடாமல் ஓர் இடைவெளியை உருவாக்கிக் கொள்கிறது. அன்பின் வழிப்பட்ட உயிர்நிலை கூட அந்த இடைவெளிக்கு அப்பால் இருந்தாக வேண்டிய அருவருப்பான நிலை. அந்த நிலையில் இந்த உடம்பு உயிரற்ற, வெறும் எலும்புகளைத் தோல் போர்த்த உடம்பே என்கிறார் நம் வள்ளுவப் பேராசான்.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (குறள் 80)

ஆக,அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்ற வள்ளுவம் நமக்குத் தெளிவாகிறது. இந்த மெய்ப்பாட்டின் பின்னணியிலே தான், திருக்குறள் காமத்துப் பாலில் வரும் காதலன், தன் காதற் கிழத்தியுடன் அமைந்துள்ள தனது நட்பைப் பற்றிக் கூறும்போது,

உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு (குறள் 1122)

என்று விளக்கம் தருகிறான்.

### பயன்பட்ட நூல்கள்

1.FREEDOM FROM THE KNOWN / Krishnamurthi, Foundation,India
64,Greenways Road,Adyar,Chennai-600 028.

2. திருக்குறள் தெளிவுரை டாக்டர் மு.வரதராசனார், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

3. திருக்குறள் கருத்துரை இரா. இளங்குமரன், திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி 101.

# இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சனை

சென்ற இதழின் தொடர்ச்சி

## யூதர் - அராபியர் பற்றிய பிரச்சனை

யூதர்களும், அராபியரும் செமிட்டிக் இனத்தினின்றும் பிரிந்த இருகிளைய்யினரென்று முன்பு கூறப்பட்டது. இங்கு சமயம் அல்லது மதம் தொடர்பான கருத்துக்களிலும், செயல்களிலும் இருகிளையாரும் ஒற்றுமையுடையவரென்று சுருக்கமாகக் காண்போம்.

யூதர்களின் தலைவர்கள் மோசஸ் என்பவரும் அவருக்குப் பின் வந்த ஜோஷுவா, சாம்சன், சால், டேவிட் ஆகியோர். டேவிட் சிறுவராக இருக்கும் போது பிலிஸ்ட்டைனைச் சேர்ந்த உருவத்தில் பெரிய கோலியாத் என்பவனை வென்றார். இவர் ஒரு பெரிய வீரனென்றும், கானானைட்டுகளைத் தோற்கடித்து, ஜெருசலேம் கோட்டையைக் கைப்பற்றி, பாலஸ்ட்டைனின் மற்றப்பகுதிகளையும் கைப்பற்றினாரென்றும் ஹீப் ரூ இலக்கியத்தில் புகழப்படுகிறார், இவரைக கடவுளின் இனிய நண்பனென்று பைபிள் குறிப்பிடுகிறது. இவருக்குப்பின் வந்த சாலமன் ஜெருசலேம் நகரில் முதற்கோயிலைக்(**Temple**) கட்டினார். இவருடைய மகன் ரெகோபோம் காலத்தில் (ஏறக்குறைய கி.மு. 930-இல்) பாலஸ்ட்டைனின் வடபகுதியில் இஸ்ரேல் நாட்டை நிறுவினர். சிலகாலம் இவர்கள் சால்டியரால் பாபிலோனில் சிறைவைக்கப்பட்டுப் பின்னர் பாரசீகரால் விடுவிக்கப்பட்டு ஜெ ருசலேமுக்குத் திரும்பினர். யூதர்களின் பிற்காலச் சமயத் தலைர்கள் எஸ்ரா, நெஹெமியா, எலிஜா, இசையா, அமோஸ், ஆகியோர். யூதர்கள் இக்கால நாகரிகத்துக்கு அளித்துள்ள தொண்டு சமயத் துறையில்தான். அவர்கள் விட்டுச் சென்ற பைபிள் என்ற சமயநூல் தான் மற்றெல்லாவற்றையும் விட மனித இனத்தின் சமய ஒழுக்க வாழ்வின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளது. இவற்றின் இரு பாகங்கள் பழைய ஏற்பாடு (**Old Testament**), புதிய ஏற்பாடு (**New Testament**) என்பவை பெரும்பாலும் ஒழுக்க விதிகளைக் கூறுலன.

பழைய ஏற்பாடு என்ற பகுதி யூத சமயம் வளர்ந்த பல பரிணாம வளர்ச்சியைக் கூறுகிறது. இதிலிருந்துதான் இயேசு கிறிஸ்து சமயநெறியைப் போதித்தார். முதலில் யூதர் ஜெஹோவா என்ற ஒரு கடவுளை வழி பட்டாலும், மற்றக்கடவுளரை மறுக்க வில்லை. பின்னர் ஜெஹோவா என்ற ஒருவர்தான் கடவுள் என்றும், மற்றக்கடவுள்கள் இல்லை, பொய் என்றும் வற்புறுத்தப்பட்டது. ஆடம்பர, ஊழலான வாழ்க்கையையும், திருவிழாக்களையும், பலிகளையும் கடவுள் விரும்பவில்லை, நல்லொழுக்க இயல்பான, நீதியான வாழ்க்கையையே கடவுள் விரும்புகின்றார் என்ற கருத்துக்கள் வேரூன்றின. ஆடம்பர வாழ்விலாழ்ந்த இஸ்ரேலைத் தண்டித்தற்குக் கடவுள் அதன்பகைவரை ஏவிவிட்டதனால்,அசீரியர் இஸ்ரேலை வென்று விட்டனர் என்று கூறப்பட்டது இஸ்ரேல் இதன் பின்னர் வரலாற்றிலிருந்து மறைந்து, பின்னர் கி.பி. 1948 -இல்தான் மீண்டும் தோன்றிற்று. கடவுள் கொடியவரென்று முதலில் இருந்த கருத்து மாறி ,கடவுள் எங்கும் நிறைந்தவரென்றும் **(Universality of god),** அவர் யாவரிடத்தும் இரக்கமும், அன்பும், நீதியும், உடையவரென்றும், ஒடுக்கப்பட்டோருக்கும், வறியோருக்கும் உதவிசெய்பவரெனவும், தீவினையாளர் வருந்தினால் அவரை மன்னிப்பவரென்றும், கருதப்பட்டார். மேலும் இத்தகைய நல்லியல்புகளை உடைய கடவுள் எதிர்காலத்தில் தோன்றுவார் என்ற நம்பிக்கையும் (Messianic Hope) தோன்றிற்று.

(கடவுளைப்பற்றி எதிர்கால நம்பிக்கை என்ற கருத்தே உலகமுடிவைப் பற்றியும் (End of the World),இறுதித் தீர்ப்பு நாள்பற்றியும் (Day of last Judgement), எதிர் காலவாழ்வு பற்றியும் கருத்துக்களை உருவாக்கிற்று, இவையே கடவுளின் நாடு உளது, அது உலகமுடிவில் வரும், எனவே எதிர்காலவாழ்வு உண்டு என்ற யூதரின்கருத்துக்களிலிருந்து

இயேசு கிறிஸ்து புதிய சமயநெறியை வகுத்தார். பைபிளின் புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு பாகங்களில் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறும், போதனைகளும், நற்செய்திகளும் (Gospels) கூறப்படு கின்றன. கிறிஸ்து கூறிய நாடு அரசியல் நாடு அன்று, அது ஒரு ஒழுக்கமான வாழ்க்கை நிறைந்த நாடு.அதில் அடக்கம், நீதி, ஒழுக் கம், அமைதிமுதலிய நற்பண்புகளும், உண்மைக்காக இடர்ப்பாடு களையும் ஏற்றுக்கொள்ளும் பண்பும் உடையவரே இருப்பர்.இந்தக் கருத்துக்கள் எளிமையாகவும் யாவருக்கும் புரியக்கூடியவையாக வும் இருந்த காரணத்தால், முதலில் இந்த புதிய சமயநெறிக்கு எதிர்ப்பு இருந்த போதிலும்,கி.பி.338-ஆம் ஆண்டிற்குப் பின்னர், ஐரோப்பிய அரசர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பரவிற்று . யூத ருடைய சமயநெறிஅந்த இனமக்களுக்கு மட்டுமே உரிய சமயநெறி யாகக் கருதப்பட்டது,கிறிஸ்துவ சமய நெறியோ யாவராலும் பின் பற்றப்படக்கூடிய சமயநெறியாகக் கருதப்பட்டு,செயிண்ட் பால் போன்ற ஆர்வம் மிக்க சமய போதகரின் உழைப்பால் மறையாமல் பெரும்பாலோரால் பின்பற்றப்பட்டு வருகிறது.

யூதர்கள் கிறிஸ்தவ நாடுகளில் வெறுக்கப்பட்டு ஒடுக்கப்பட் டனர் ; யூதர் - கிறிஸ்துவ மண உறவுகள் தடைசெய்யப்பட்டன ; அரசாங்க அலுவல்களினின்றும் நீண்ட காலம் ஒதுக்கி வைக்கப் பட்டனர் ; வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழிலை மட்டும் செய்த னர். இவர்கள் இரக்கமற்ற,கடும் வட்டி வாங்குபவரென்ற கருத்தை நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர் தமது வெனிஸ்வர்த்தகனென்ற நாட கத்தில் ஷைலக் என்ற பாத்திரத்தில் வைத்துக் காட்டியுள்ளார்.

யூதர்கள் இவ்வாறு துன்புறுத்தப்பட்டாலும்,வெறுக்கப்பட்டாலும் அவர்களும் ,அராபிய முஸ்லீம்களும் மறுமலர்ச்சிக் காலத்தில் (Period of Renascence) அதவாது கி.பி.13-ஆம் நூற்றாண்டில்

ஐரோப்பிய அறிவியல் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்துள்ளனர்.

அரிஸ்ட்டாட்டில் முதலிய கிரேக்க ஆசிரியர்களுடைய நூல்கள் அராபிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு மேலை நாட்டுப் பல்கலைக் கழகங்களில் கற்றுக் கொடுக்கப்பட்டன . அவர்கள் வழியாகவே பல மருத்துவநூல்கள் பண்டைய நூல்கள் மீண்டும் புத்துயிர் பெற்றன.யூதர்கள் பிரான்சில் மான்ட் பெல்லியரிலும், இத்தாலியில் சாலர்னோவிலும் , ஸ்பெயினில் டொலேடோ, கொர்டோவா, செவெல் முதலிய இடங்களிலும் கல்வி நிலையங்களை அமைத்துக் கல்வியிலும் , மருத்துவத் தொழிற் பயிற்சியிலும் வல்லுநர் உருவாவதற்கு உதவி செய்தனர் . நைல் முகத்துவாரத்திலுள்ள அலக்சாண்டிரியாவின் . யூதர்கள் பைபிளின் பழைய ஏற்பாட்டுப் பகுதியை கிரேக்க மொழியில் பெயர்த்தெழுதி வைத்தனர்.கி.பி.1095 -1295 ஆண்டுகளுக்கிடையே ஐரோப்பிய கிறிஸ்துவருக்கும், துருக்கிய முஸ்லீம்களுக்கும் இடையே நடந்த சிலுவைப் போர்களின் விளைவாக ஐரோப்பியருக்கும் , அராபிய முஸ்லீம்களுக்குமிடையே அறிவு வளர்ச்சித்துறையில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது*. யூதரும் , அராபியரும் எகிப்திலும் , மேற்காசியாவிலும் சேகரித்து வைத்திருந்த பிளேட்டோ, அரிஸ்ட்டாட்டில் முதலிய ஆசிரியர்களுடைய நூல்களெல்லாம் யாவராலும் அறியப்பட்டன. பேராசிரியர் ஜார்ஜ் எச், சபைன் என்பார் தமதுஅரசியற் சிந்தனைகளின் வரலாறு என்ற நூலில் கூறுவதாவது :

"பன்னிரண்டு, பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் பாரிஸ் , ஆக்ஸ்பர்டு பல்கலைக் கழகங்களிலுள்ள புலவர்களும்,டாமினிக்கன் துறவிகளும் பண்டைய ரோமானிய சட்ட முறையைக் கற்றறிந்தனர்......................அரிஸ்ட்டாட்டிலின்நூல்களும்,அவற்றைப்பற்றி

அராபிய யூதப் புலவர்களும் எழுதி வைத்திருந்த விளக்கவுரை களும் கண்டுபிடிக்கப்பட்டன. அரிஸ்ட்டாட்டிலின் நூல்களும் விளக்கவுரைகளும் மொழி பெயர்ப்புக்களிலிருந்து லத்தீனில் எடுத்தெழுதப்பட்டு முடிவில் அரிஸ்ட்டாட்டில் எழுதிய கிரேக்க மூல பாடத்திலிருந்தே முழுமையும் நேராக ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன."ஐம்பூதங்கள், உயிர்வகைகள் ஆகியவை பற்றிய அடிப்படை உண்மைகளை நாம் சரியாக அறிந்து கொள்ளுதல் வேண்டுமாயின் அவற்றின் செயல்களுக்கான காரணங்களை ஆராய்தல் வேண்டும். இவ்வாறு எதனையும் பற்றிய ஒரு சரியான கருத்து நமக்கு வேண்டுமாயின் அது ஏன் ஒரு குறிப்பிட்ட வகையில்இயங்குகிறது?"என்ற வினாவை முன்வைத்தே ஆராய்தல் வேண்டும். இதுவே இக்காலத்தும் பின்பற்றப்படுகிற விஞ்ஞான அணுகுமுறை (Scientific Approach) ஆகும். இந்த ஆய்வு முறையைப் பின் பற்றி பௌதிகம் (Physics) விலங்கியல், (Zoology) உளவியல் (Psychology) ஒழுக்கஇயல் (Ethics), அரசியல் (Politics) முதலிய நூல்களை எல்லாம் எழுதிய அரிஸ்ட்டாட்டிலை நமக்கு அறிமுகப்படுத்திய யூத,அராபிய நன் மக்களை நாம் பாராட்டுதல் தகும்.

**அராபிய முஸ்லிம்கள் ஆற்றிய தொண்டுகள் :**

அரேபியாவில் மெக்காநகரத்தில்கி.பி.570-இல்பிறந்த முகமது, சிறுவயதில் வாணிபம் செய்து, 40-ஆம் வயதில் ஒரு கடவுட் கொள்கையையும், வழிபாட்டையும் வற்புறுத்தும் ஒரு புதிய சமய நெறியை மக்களுக்கு எடுத்துக் கூறினார். இந்நெறியைத் தனக்குக் கபிரியேல் என்ற தேவதூதர் வெளிப்படுத்தியதாகக்கூறினார். இவருக்கு முதலில் எதிர்ப்பு இருக்கவே, இவர் கி.பி. 622.

இல் மெடினாவுக்குச் சென்றார்(இவ்வாண்டிலிருந்தே முஸ்லிம்களின் ஹிஜிரி ஆண்டு முறை தொடங்குகிறது). அடுத்து 10 ஆண்டுகளில் (தாம் மறையும் வரை) இவர் காட்டிய புதிய சமய நெறி அரேபியாவில் பரவி பின்னர் மேற்கு ஆசியா, எகிப்து வட ஆப்பிரிக்கா, வடமேற்கு இந்தியா, ஆகியவற்றில் பரவிற்று. முஸ்லிம்களின் வேத நூலாகிய குரானில் முகமது கூறிய ஒரு கட்வுட் கருத்தும், ஒழுக்கவிதிகளும் அடங்கியுள்ளன. மற்றக் கருத்துக்களாவன : ஹீப்ருக்களின் தலை வரான ஆபிரகாம், மோசஸ் ஆகியோரும், கிறிஸ்துவரின் கடவுளான இயேசுவும் முகமதுவைப் போல தீர்க்கதரிசிகளே (Prophets) ஆவர். இந்தக் கருத்தும், குரான் கூறும் ஒழுக்கவிதிகளும் அராபியருக்கும், யூதருக்குமிடைய சமய அடிப்படையில் ஒற்றுமை இருக்கிறது என்ற உண்மையைக் காட்டுகிறது. கடவுள் மனிதரிடத்து இரக்கமும், அன்பும் உடையவர்.பெற்றோர்களிடத்து பணிவு, வறியோருக்கும், துன்புற்றோ ருக்கும் உதவி, இறப்புக்குப்பிந்திய நிலையில் ஒவ்வொருடைய வினைக்கு ஏற்ற தீர்ப்பு, ஆகிய கருத்துக்ளெல்லாம் யூத கிறிஸ்துவ நெறிகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. முகமதுவுக்குப் பின்வந்த இஸ்லாமிய சமயத்தலைவர்கள் காலிப்புக்கள் (Caliphs) எனப்படுவர். இவர்கள் சமயத்தலைவர்களாக இருந்தமட்டுமல்லாமல், முஸ்லிம் மக் கள் இஸ்லாம் சமய நெறியில் வாழ்வதற்கு ஏற்ப ஆட்சியும் செய்த மையால் முஸ்லிம் அரசு இஸ்லாமிய சமயச் சார்புடைய அரசாக (Theocratic State) இருந்தது. மேலும் ஒவ்வொரு முஸ்லிமும் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஐந்து கடமைகளோடு (அல்லா அல்லது ஒரு கடவுள் நம்பிக்கை, நாடோறும் 5 முறை தொழுதல், வறியோருக்குத் தருமம், ரம்ஜான் மாதத்தில் பகற்பொழுதில் உண்ணா நோன்பு,ஹஜ் புனிதப் பயணம் முதலியவற்றோடு), ஆறாவதாக ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாத மக்கள் மீது புனிதப்போர் அல்லது ஜிகாத் நடத்தி

அவர்களை இஸ்லாம் சமயத்தில் கட்டயமாகச் சேர்த்தல் வேண்டுமென்று முகமது கூறிய கடமையையும் நாம் காணும் போது, பண்டைக் காலத்தில் இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சியின் இயல்பையும், இப்போது ஒசாமாபின் லாடன் கூறும் கூற்றுக்களின் பின்னணியையும் நாம் அறிந்து கொள்ளலாம். சமயம் வேறு, குடிமை உரிமைகள் (Civil Rights) வேறு. ஒரு குறிப்பிட்ட சமயக் கருத்தினடிப்படையில் இக்கால அரசு முறைகள் அமைய வில்லை,அமைதலும் இயலாது என்பதே இப்போது நடைமுறையிலுள்ளது. எனவே, இந்த ஆறாவது கடமை வற்புறுத்தப்படுவதில்லை.

அராபிய முஸ்லிம்கள் பல நல்ல தொண்டுகள் செய்துள்ளனர். காலிப்புக்கள் ஒழுங்கான ஆட்சிமுறையையும், வரிமுறையையும் வகுத்தனர்.

**மற்றப் பணிகள்,சாலைகள் அமைப்பு :**

திறமிக்க அஞ்சல் துறை ; பாசனகால்வாய்கள் ; வளைவுகள், அரைக்கோளங்கள் உடைய கட்டிடக்கலைகள்; பாக்தாத், கெய்ரோ, கொர்டோவா நகரங்களில் பல்கலைக் கழகங்கள், நூலகங்கள்: 1,2,3 முதலிய எண் முறைகளும், சங்கேத கணிதமும் (Algebra) முக்கோணஇயல், பார்வை இயல் (Optics), வானநூல் முதலியவை: மருத்துவ நூல்கள், இலக்கியங்கள்: தொழில் வகைகளை வளர்த்தல்: வாணிபத்தை ஊக்குவித்தல், முதலியவை.

மேற்கூறிய செய்திகளிலிருந்து யூதரும், அராபியரும், 1) இனம், 2)சமயம், 3)மொழி 4)நாகரிகம் ஆகியவற்றில் எல்லாம் ஒன்றுபட்டவரே என்றும், இவர்களிடையே போரும் பகையும் தோன்றுதற்குக் காரணமே இல்லை என்றும் நாம் தெளிவாக அறிந்து கொள்ளுகிறோம்.

ஒசாமாபின் லாடனைப்பற்றி ஒரு சிறு குறிப்பு :

இவர் சவூதி அரேபிய நாட்டின் குடிமை உரிமை பெற்ற ஒரு தீவிரவாத முஸ்லிம். இவர் முதலில் ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் ரஷ்யாவை அகற்றுவதற்காக, சவூதி, பாகிஸ்தானுடன் சேர்ந்து, அமெரிக்காவின் உதவியோடு புனிதப்போர் நடத்தினர்.1989ல் உலக முஸ்லீம் லீக் தலைவராகி, 1990 - இல் இராக்-குவயத் போர் நடந்த போது, அமெரிக்கத் துருப்புக்களை எதிர்த்தார். 1994-இல் சவூதி அரேபியா எடுத்த நடவடிக்கையினால், இவர் அந்நாட்டின் குடிமை உரிமையை இழந்தார். பின் தன் 3 மனைவியருடனும் 13 குழந்தைகளுடனும் ஆப்கானிஸ்தானில் குடியேறி, சொமாலியா, எகிப்து, சூடான், ஏமன் முதலியவற்றில் பயங்கரவாத அணிகளை இயக்கி அமெரிக்கருக்கெதிராகப் புனிதப்போர் விளம்பரம் விடுத்தார். அமெரிக்கா இவருடைய 300 மிலியன் டாலர்களை முடக்கி வைத்தது. பின் இவர் கென்யாவில் அமெரிக்க தூதரகங்களின் மீதும், டான்சா ணியா மீதும் குண்டுகளை வீசி அழித்தார். அமெரிக்கா இவரை குற்றவாளியாகக் கருதி இவருடைய தலைக்கு 5 மிலியன் டாலர் விலையை விதித்தது. இவர் இப்போது ஆப்கானிஸ்தானிய தாலிபான் அரசாங்கத்தின் பாதுகாப்பிலிருந்து வருகிறார். இவரை அமெரிக்கா விடம் ஒப்படைக்க ஆப்கானிஸ்தான் மறுப்பதால், அதன் மீது அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. ஒசாமா முஸ்லிம் சமயத்தலைவர்கள்அடங்கிய நீதி மன்றத்தால் முஸ்லிம் நாட்டில் விசாரிக்கப்படுதற்கு ஆப்கானிஸ்தான் இசைந்தா லும் அமெரிக்கா ஏற்றுக் கொள்ளவில்லை. சர்வதேசமக்களெல்லாம் இப்பொழுது சர்வதேசப் பயங்கரவாதச் செயல்களைக் கடுமையாக ஒடுக்குதல் வேண்டுமென்று கூறியுள்ளன. இதன் பொருட்டு நடவ டிக்கைஎடுத்தற்கும் அவை ஆர்வமுடன் இருக்கின்றன. இந்தப்

பிரச்சினையும், மேற்காசியப் பிரச்சனையும், உலக நல்லுறவுக்கும், அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஒரு இடையூறாக உள்ளன.

**இன்று வரை அரேபிய-இஸ்ரேல் நல்லிணக்கத்துக்காகச் செய்யப்பட்ட முயற்சிகள் :-** பாலஸ்தீனியர் வசமுள்ள காசாப் பகுதியில் இஸ்ரேலிய படை அதிகாரி 2001 ஜனவரி இறுதியில் தாக்கப்பட்டுக் காயமடைய இஸ்ரேல் காசாவின் தெற்கு- வடக்கு வழிப் பாதையை அடைத்தது. ஆயினும் 16.000 பாலஸ்தீனிய தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு வேலைக்குச் சென்று திரும்பி வருவதற்கு ஒத்துக் கொண்டது. இது அதன் கட்டுப்பாடு சிறிது தளர்ந்தது: 4 மிலியன் பாலஸ்தீனிய அகதிகள் இஸ்ரேலுக்குத் திரும்புதலை இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளவில்லை, இஸ்ரேல் தனது பாதுகாப்புப்பிரச்சனைகளில் சிறிது விட்டுக்கொடுக்க முன் வந்தாலும், அராபியக்கழகம் அல்லது ஃபட்டா (Fatah) வின் தலைவர் யாசர் ஒத்துக் கொள்ளவில்லை. 6மிலியன் யூதரை இஸ்ரேலில் 4 மிலியன் அரேபியர் திரும்பிவந்தால் யூத இயல்புகள் இஸ்ரேல் நாட்டில் அழிந்துவிடுமென்று அது அஞ்சுகிறது. மேலும் ஜெருசலேமிலுள்ள கோயில் மலையை (Temple Mount) யூதர் தங்களுடைய புனித இடமாகக் கருத, அராபிய முஸ்லிம்கள் அது தங்களுக்குரிய புனிதக்கோயில் என்று கூறி (Holy Sanctuary) அது தங்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டுமென்று கூறுகின்றனர். இதனால் பாலஸ்தீனருக்கும் யூதருக்கும் 2000, செப்டம்பரிலிருந்து கடும் மோதல்கள் எற்பட்டு வருகிறது. இதில் 420 பேர் உயிரிழந்துள்ளனர், இவருள் பெரும்பாலோர் பாலஸ்தீனர். இஸ்ரேல் ஜெருசலேம் நகரின் புனிதப் பகுதிகளின் மீது தனக்குள்ள இறைமை அதிகாரத்தை பாலஸ்தீனத்துக்கு மாற்ற இஸ்ரேல் தலைமை அமைச்சர் மறுத்தார். அமெரிக்க ஜனாதிபதி கிளின்ட்டன் இருசாராரும்

கொள்கையளவிலேனும் ஒரு ஒப்பந்தைச் செய்து கொள்ளுதல் வேண்டுமென்றும், சமாதான வாழ்க்கையுடனிருக்கவும், தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துதல் வேண்டுமென்றும் தீவிரமான சமயக்கோட் பாடுகளை நீக்குதல் வேண்டுமென்றும் கூறினார். இதை பாலஸ்தீனி யர் ஒப்புக்கொள்ளவில்லை, இதற்குப்பின் இருமுறை செய்யப்பட்ட முயற்சிகளும் வெற்றி பெறவில்லை. இப்பொழுது இஸ்ரேலில் ஆட் சிக்கு வந்துள்ள விகுட் கட்சித் தலைமை அமைச்சர் ஆரியல் ஷெரான் அமெரிக்க அரசாங்கச் செயலர் ஜெனரல் கோலின் பவ் வல் என்பாருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அதில்,

1. படிப்படியாக இருசாராருக்குமிடையே ஒரு அமைதி உடன் படிக்கையை ஏற்படுத்துதல் வேண்டும்.

2. பாலஸ்தீனக் குடிமக்கள் மீது இஸ்ரேலியர் விதித்துள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுதலும், போர் நிறுத்தப்படுதலும் வேண்டும். இஸ்ரேல் காசா மீதும், மேற்குக் கரைப்பகுதி மீதும் விதித்து வரும் முற்றுகையை அறவே நீக்கி, இருசாராரும் போர் முறையை அறவே விடுத்துப் பேச்சு நடத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

**முடிவுரை :**

உலக நாகரிக வளர்ச்சிக்கு அரிய பெரிய தொண்டுகள் ஆற் றிய யூத, அரேபியப் பெருமக்கள் நிலையான நல்லுறவை ஏற்படுத்து தல் வேண்டுமென்று உலகம் எதிர்பார்க்கிறது .


# பைதிரம் - ஒரு குறிப்பு

டாக்டர். அ.மா.பரிமணம்

பைதிரம் சொற் பொருளைச் சிந்திக்கு முன்னர்ப் பழந்தமிழ் இலக்கண மரபுகள் சிலவற்றை நினைவுகூர்தல் இன்றியமையாத தாகும். தொன்மைச்சிறப்புமிக்கதும், உயர்தனிச் செம்மைசான்றதும். நாகரிகம் மிக்க ஓரினத்தின் தாய்மொழியாக இற்றை நாளிலும் விளங்குவதுமாகிய ஒரு மொழி, அம்மொழி பேசும் இனத்தவர், அரசியல், வணிகம், சமயம் போன்ற காரணங்களால் பிற இன மக்களொடு தொடர்புகொள்ள நேர்வதும். அது போழ்து அந்தப் பிற இனமக்களின் சொற்கள் சிலவற்றை இன்றியமையாமை நோக்கித் தன் மொழியிற் சேர்த்துக் கொள்வதும் இயல்பாகும் என்பதனை இற்றை நாள் மொழி யியலாரும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். தமிழ் மொழியும் இந்த மொழியியல் உண்மைக்குப் புறம்பானதன்று. அவ்வாறு வந்த சொல் உணர்த்தும் பொருளைக் குறிக்கும் பிற சொல் புகுந்த மொழியில் முன்னர் இல்லை போலும் என்று முடிவு செய்தல் கூடாது. மொழியில், ஒரு பொருட்பன்மொழி தோன்றும் காரணங்களில் பிறமொழிச்சொல் புகுதலும் / புகுத்தலும் ஒன்றாகும்.

வளர்தமிழின் இயல்புணர்ந்து, 'என்று முள தென்றமிழ்' எனப் புலவர் போற்றும் தமிழ் மொழிக்கண் தம் காலத்திலும் எதிர்காலத்தி லும் புகும் வாய்ப்புண்மையை உணர்ந்து தொல்காப்பியர், தம் இலக் கணத்தில், தமிழின்கண் பிறசொற்கள் புகுதற்காம் வழியும் வரம்பும் கோலி விதிகள் அமைத்துத் தமிழ்மொழிக் காப்புச் செய்து சென்றி ருப்பது அரும்பணிகளுள் தலையாயதாகும். அவர் கூறிய வடசொற் கிளவி என்பது வடதிசைக்கண் வழங்கும் மொழிகளின் சொற்கள் என்றே பொருள்படும். அங்ஙனம் கொள்ளாது , சமசுகிருத மொழிச்

சொற்கள் என்று பலரும் பொருள் கொண்டு மயங்கியுள்ளனர். பண்டைய தமிழகத்தின் கிழக்கு, தெற்கு, மேற்குப் பகுதிகள் கடல் பரப்பாக இருத்தமையாலும், வடக்கே இலக்கிய மொழியாகிய சமசுகிருதம்,சமணர்தம் வழக்கு மொழியாகியபிராகிருதம், பிற பௌத்தர் வழக்கு மொழியாய பாலி ஆகியன இருந்துள்ளமையாலும், அக்காலத்திலேயே தமிழகத்தில் வைதிக-சமண-புத்த சமயங்கள் கால் கொண்டிருந்தமையாலும், அதனால் அம்மொழிகளிலிருந்து தமிழ் மொழிக்கண் சில சொற்கள் புகும் வாய்ப்பிருந்தமையால் அம்மொழிகளைவடசொல் எனும் பெயரால் தொல்காப்பியர் குறிப்பிட நேர்ந்தது. அம்மொழிகளிலிருந்து நேரே தமிழ் மொழிக்கு வந்த கிளவிகளும் (சொற்கள்) அம்மொழிகள் ஒன்றின் ஒன்று புகுந்து பின்னர்த் தமிழின்கண் இடம் பெற்ற கிளவிகளும் வடசொற்கிளவிஎன்றே குறிக்கப்பெற்றன . அதனைப் பின்வரும் வரை கோட்டு வடிவிற் காணலாம்.



தமிழிலிருந்து, வடதிசை மொழிகளுக்குச் சென்ற சொற்கள் பற்றிய விவரங்களைத் தமிழ் இலக்கண நூல்களில் காணு மாறில்லை !

ஓரெடுத்துக் காட்டினால், தமிழிற் பிறமொழிச் சொற்கள் புகுவதனைக் காணுமுன்னர்த் தொல்காப்பியர் வெவ்வேறிடங்களில் தமது நூலிற் கூறிய இரு செய்திகளை நினைவிற்கொள்வது நல்லது. அவற்றுள் ஒன்று, 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல் -சொல், பெயர்-1); பிறிதொன்று, 'மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா,' (தொல் சொல்-உரி.96). இவற்றிற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கங்கள் எவையாயினும்,தமிழில் பொருள் உணர்த்தாச் சொல் எதுவுமில்லைஎன்பதும்,ஒரு பொருளுக்குக் கூறப்படும் பெயர் எக்காரணத்தால் அமைந்தது என்பதனைச் சிலவேளைகளில் அறிய இயலாமல் போதலும் கூடும் என்பதும் கருத்துக்களாகும் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது. அதனால் காரணம் தெளிவாக அறிய இயலா நிலையில் மரபு வழியாகப் பொருளை உணர்ந்து பயன்கொள்வதுவே சிறந்தாகும். மாறாக, அரிய சொற்களுக்குத் தத்தம் ஊகத்தின் படி காரணம்/வேர்ச்சொல் காண முற்படுவது நேரிதாகாது.

வயிற்றுத் தீத் தணிய, தன் பிற தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒருவன் பிறர்பால் தாழ்ந்து வேண்டுவதலைக் குறிக்க "இரத்தல்" என்னும் சொல் உளது. இரப்பு என்பது பிறரிடம் யாசித்துப்பெறும் செயலைக் குறிக்கும். "இரப்பும் ஓர் ஏருடைத்து" என்பது திருக்குறள் (1053). இரவு, இரவச்சம் என்று அதிகாரப் பெயர்கள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. அப்பரடிகள் தம் தேவாரத்தில் இடம் பெறும் பழமொழிப் பதிகத்துள் பயிக்கம் என்னுமொரு சொல்லினை ஆண்டுள்ளார்.பாவியேன்'அறியாதே பாழூரில் பயிக்கம்புக்கு எய்த்தவாறே' என்பது அவரது திருவாக்கு (தேவாம் 4-5-8). மக்கள் பதிபெயர்ந்து

பாழ்பட்டுக் கிடக்கும் ஒரூரில் செல்லும் ஒருவன் ஒன்றும் பெறாமல் இளைப்பது இவ்வடியின் கருத்து. பயன் மிக நல்கும் சைவத்தினை விடுத்துப் பயன் எதுவும் பயவாத சமணத்திற்குச் சென்று உழன்ற அடிகள் தம் நிலையை உணர்த்த மேற்கொண்ட பழமொழிகளுள், 'பாழுரில் பயிக்கம் புக்கு எய்த்தல்'ஒன்றாகும். வரிவடிவிலும்,ஒலி வடிவிலும் தமிழாகவே காணப்படும் இச்சொல்லிற்குச் சென்னைப் பல்கலைகழகத் தமிழ்ப்பேரகராதி, பிச்சை (Alms) என்று பொருள் கூறி, அப்பரடிகளின் இந்த இடத்தையே மேற்கோளாகக்காட்டி, (N<bhaikra) என்று வேர்ச் சொற்குறிப்பும் கொடுத்துள்ளது. அப்பரடிகட்கு முந்தைய இலக்கிய ஆட்சியில் இச்சொல் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. பழமொழியாகப் பயன்படுத்தி யுள்ளதால் ஒருகால் அன்றைய மக்கள் வழக்கில் இடம் பெற்றி ருக்கலாம். அப்பரடிகளின் வாழ்க்கையை நன்கு உணர்ந்தவர்கள் அவர் தமிழ்மொழியோடு சமசுகிருதம், பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளிலும் புலமை சான்றவராக இருந்துள்ளமையினை அறிவர். வைதிக நெறியில் கற்கும் மாணவர் பிட்சை (பிச்சை) ஏற்றுண்பது உண்டு. 'அன்னாய் இவனோர் இளமாணாக்கன்.............. இரந்தூண் நிரம்பா மேனியொடு....பெருஞ்செம்மலன்' - (குறுந்-33) என்று மாணவ நிலையில் இரந்தூண் கொள்ளும் நிலைமை பற்றிக் கூறும் குறிப்புச் சங்கநூலில் காணப்படுகிறது.மாணாக்கர் இந்த இரந்துண்பது மரபு என்பது உ.வே.சா. அவர்கள் குறிப்பு.வைதிக, சமண, புத்த சமயத்துறவியர் கள் இரந்தே உண்ணல் வேண்டும் பிச்சை ஏற்றே உண்ணல் வேண்டும், என்னும் நியதியும் பண்டுண்டு. (ஆனால் இன்று பிஷை ஏற்றல் எனும் பெயரால், அரண்மனை விருந்தினைஒக்கும் விருந்தேற்கும் துறவியர் களைக் காண முடிகின்றது).

இரத்தல் பொருள் படும் 'பயிக்கம்' என்னும் சொல் தம்காலத்த மிழ் வழக்கில் இடம் பெற்றிருந்ததாயினும் சரி, அன்றித்தாமே தமிழிற் புகுத்திய சொல்லாயினும் சரி அதனை அடிகள் ஏன் பயன்படுத்தினார் என்பதனைச் சிந்தித்தல் வேண்டும்.'ஈயென இரத்தல் இழிந்தன்று'என்றும் ஆவிற்கு நீர் என்று இரப்பினும் அது நாவிற்கு நல்குரவாகும் என்றும் பழந்தமிழ்ச் சமுதாயம் கருதியது. 'இரக்கு வாரேன் எஞ்சக் கூறேன்'என்று செம்மாந்து கூறிய செம்மலைச் சங்க இலக்கியம் காட்டுகின்றது. காலப்போக்கில், இரந்துண்டலைச் சமயத்துறவியருக்கான நியதியாக வலியுறுத்தும் சமயங்கள் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்ற நிலையில், வறுமையால் வயிற்றுக்காக இரந்துண்பதற்கும்,சமய நோன்பு முதலிய காரணங்களால் இரந்துண்பதற்குமுள்ள வேற்றுமையை அறிந்தே அப்பரடிகள் பயிக்கம் என்னும் சொல்லை ஆண்டிருத்தல் வேண்டும். நோன்பு காரணமாகப் பயிக்கம் புகுவோர்க்கு ஊரவர் எவரும் உணவிடமறுக்கமாட்டார்கள். பாழூர் என்பதனைஅறியாமல் அச்சமயம் புக்கு உழன்ற தன்நிலையினை உணர்த்துதற்கு அறியாது புகுந்தவர்,உணவிடுவாரின்மையில் எய்க்காமல் இருப்பது யாங்ஙனம்?சமணத்தில் உய்தி பெறுதற்கு வழியில்லை என்பதனை அறியாமல் அச்சமயம்புக்கு உழன்ற தன் நிலையினை உணர்த்தற்கு இந்த உவமை (பழமொழிப் பொருள்) பொருத்தமாக உள்ளமையால் முன்னரே தமிழில் உள்ள இரத்தல் என்னும் சொல்லைப் பயன்படுத்தாது, பயிக்கம் எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இந்தத் தமிழ் வடிவச் சொல், ஒரு சிறப்புக்கருதி அப்பரடிகளால் மேற்கொள்ளப்பட்ட தன் சிறப்புக் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழில் வழங்கும் பிச்சை, பிக்கு, பிக்குணி போன்ற வடிவங்கட்டு

மூலமாகலாம் எனக் கருதப்படும் பிக்ஷை என்னும் சொல் வடமொழி களில் எதன்கண் முதலிற்றோன்றி, எம்மொழி வழியாகத் தமிழில் வந்தது என்பதனை அறியமுடியவில்லை. அப்பரடிகளைப் போலச் சமசுருகிருதம்,பிராகிருதம்,பாலி ஆகிய மொழிகளில் வல்ல தமிழறி ஞர்கள் இருப்பாராயின் அதன் மூல நிலையினைத் தமிழ் இலக்கிய வழக்கில் இடம் பெற்ற சொற்களில் ஒன்றாகக் கருதுவதே ஏற்புடையதாகும்.

தேவார காலத் தமிழ் இலக்கிய வழக்கில் இடம் பெற்ற இந்தச் சொல்லைப்போலத் சங்க காலத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்ற சில சொற்களில் ஒன்றாக விளங்கும் பைதிரம் என்னும் சொல்லை அதன் பொருளைச் சிந்திப்பது பயனுடையதாகும்.

சங்கநூல் ஒன்றில் மட்டிலுமே இடம் பெறும் சொற்களுள் ஒன்று பைதிரம் என்னும் சொல். பதிற்றுப்பத்தின் இரு செய்யுட்களில் மட்டுமே இடம் பெறுகின்றது. அந்நூற்பாடல் ஒன்றினுக்கு அதன் தொடர்களில் ஒன்றான 'வளன் அறு பைதிரம் 'என்பது அப்பாடலின் பெயராகக் கொளப்பட்டிருத்தலால் அதன் பதிகத்தின் பெயர்களைக் குறிக்கும் பகுதியிலும் இச்சொல் இடம் பெறுகின்றது. குமட்டூர்க் கண்ணனார் எனும் அந்தணப்புலவர், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மீது பாடிய பாடலில் (பதிற்.2-ம்பத்து-9ஆம் பாடல் அமைந்த 'வாழ்தல் ஈயா வளன் அறுபைதிரம் 'என்னும் அடியிலும், காப்பியாற்றுக் காப்பியனார் எனும் புலவர் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் மீது பாடிய பாடலில்(பதிற்-4-ஆம் பத்து 8-ஆம் பாடல்) 'வளம் தலை மயங்கிய பைதிரம் திருத்திய' என்னும் அடியிலும் பைதிரம் என்னும் சொல் இடம் பெறுகின்றது. இவ்விரு புலவர்களின் பாடல்கள் எவையும் பிற சங்க நூல்களில் காணப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இரு பாடல்களிலும் பைதிரம் என்னும் சொல் நாடு எனும் பொருளி

லேயே ஆளப்பட்டுள்ளது. நாடு என்னும் பழந்தமிழ்ச்சொல் சங்கநூல் களிலும் பிற்கால நூல்களிலும் எண்ணற்ற புலவர் பெருமக்களால் ஆளப்பட்டதாகும். அக்கால மக்கள் வழக்கில் இச்சொல் இடம் பெற்றிருந்ததனை இன்று வெளிப்படுத்தப்பட்டுள்ள கல்வெட்டுக்களால் அறியலாம். இவ்விரு புலவர்களுமே தத்தம் பாடல்களில்நாடு கவின் அழிய நாமம் தோற்றி என்றும் (பதிற் 13-10)பிழையா விளையுள் நாடு அகப்படுத்து (பதிற் 32-14) என்றும் நாடு என்னும் சொல்லினை ஆண்டுள்ளனர். பிற சங்கப் புலவர் எவரும் பயன்படுத்தாத இந்த அரிய சொல்லினை (பைதிரம்) நாடு என்னும் பொதுவான பொருளில் ஏன் ஆண்டுள்ளனர் என்பது சிந்திக்கத்தக்கது. குமட்டுக்கண்ணனார் தம் அரசரின் பகைவர் நாட்டினைச் சோழ பாண்டியர்) குறிக்கவும், காப்பியாற்றுக்காப்பியனார் தம் அரசனது நாட்டினைக்குறிக்கவும் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். என்பது நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

"பைதிரம்" எனும் சொற்பற்றிச் சிந்திக்கு முன்னர்ச் சமூக இயல் வல்லுநர்கள் குடும்பம், குடும்பத்தலைமை, சொத்து முதலியவற்றின் உரிமை இறக்கம் (right inheritance) போன்றவை பற்றிக் கூறியுள்ள சிலவற்றை எண்ணுவது தக்கது. பொதுவாக எல்லாச் சமுதாயத்திலும், மிக மிகப் பழங்காலத்திலும்,குடும்பத் தலைமை தாய்க்குரியதாகவும், குடும்பச் சொத்துரிமை தாய் வழி மக்களுக்கு இறங்குவதாகவும் அமைந்தது என்றும் காலப்போக்கில் குடும்பத் தலைமை தந்தைக்குரியதாகியது என்றும் , அப்போது குடும்பச் சொத்துரிமை தந்தைவழி இறங்குவதாக அமைந்தது என்றும் கூறியுள்ளனர். தமிழில் உள்ள 'தாயம்' என்னும் சொற் காரணத்தைச் சிந்தித்தால் அது சமுதாயத்தில் குடும்பத்தில் தாய்த் தலைமையும் தாய்வழி உரிமை இறக்கமும் நிலவிய காலத்தில்

உருவாகிய தொல் பழங்காலத் தமிழ்ச் சொல் என்பதனை உணரலாம். அந்த நிலைமாறிக் குடும்பத்தில் ஆட்சியில் தந்தைத் தலைமை ஏற்பட்ட போது தாயம் என்ற சொல்லின் சிறப்புப் பொருள் தன்மை மாறி உரிமை என்னும் பொதுப் பொருள் தன்மை எய்தியது என்பத னையும் உணரலாம். தந்தைவழி உரிமை இறக்கம் (Patriarchical)அமைந்தநிலையில்,அதற்காகத் தந்தை எனும் பெயர் அடிப்படையில் வேறொரு சொல்லை உருவாக்காது, 'தாயம்' எனும் சொல்லையே தமிழ்மக்கள் பயன்படுத்தினர்போலும். தாயம் போலத் தந்தைவழி உரிமை இறக்கத்தை உணர்த்தும் பிறிதொரு சொல் தமிழில் அமையாமையும் கருதத்தக்கது.

நாடு எனும் சொற்பொருளும்,சிறந்த தமிழ்ஒலிச் சேர்க்கையும் கொண்டு விளங்கும் பைதிரம் என்னும் சொல்லினைப் படுத்துக்காண் போம்.அதனை,1)பை+திரம்,2)பைது+இரம் என்று இருவகைகயாகப் பகுக்கலாம்.பை என்பதற்குப் பசுமை,நிறம்,இளமை,அழகு என்னும் பொருட்களையும்,பைது என்பதற்குப் பசுமை,ஈரம் என்னும் பொருட்க ளையும் திரம் என்பதற்கு உறுதி,வலி,உரம்,பூமி என்னும் பொருட்க ளையும் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி (Lexieon) தருகின்றது. திரம் என்பதற்கு அடிப்படை காட்டுகையில் ஸ்திர (Sthira) என்பதனைக் காட்டியுள்ளது . இந்த அடிப்படையில் மூலம் காண முயன்றால், பைதிரம் என்னும் சொல் தமிழ்ச் சொல்லும் (பை, பைது) பிற மொழிச் சொல்லும்(ஸ்திர) இரண்டும் இணைந்து மருவிய சொல்லாக அமையும். இலக்கணிகள் இரு மொழிக் கலப்புச் சொல்லை விளக்க நரமடங்கல் (நரசிங்கம்) என்பதனைக் காட்டுவர்.

இவ்வகையாகக் கருதாமல் ஒரு வடதிசை மொழியினின்றும் திரிந்து வந்த வடிவமாகக் கருதவும் இடமுண்டு. பிதிர், பித்ரு,பிதா, என்னும் வடிவங்கள் சமசுகிருதத்தினின்றும் வந்து தமிழில் இடம் பெற்ற சொற்கள் ஆகும்.சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி

"பைதிருகம்" என்னுமொரு சொல்லைக் குறிப்பிட்டுப் பைதிருகம் Paitirugam,n, <, Paitrka, 1) That which pertain to father: தந்தைக்குரியது. 2) That which is inherited from one's father தந்தை வழியாக வந்த பொருள் என்று விளக்கமும் பொருளும் தந்துள்ளது. பைதிரிகம் என்று தமிழில் திரிந்து வந்த வடிவம் வடதிசை மொழிகளுள் எதற்குரியதாய், எவ்வழியில் திரிந்து வந்தது என்பதனை உணரக்கூடவில்லை. பைதிரிரம் என்றும் திரிந்து அமைந்த வடிவம் பொருளில் திரிபடையாது, ஒலி வடிவில் மட்டும் பைதிரம் என்று மேலும் திரிந்து தமிழில் இடம் பெற்றுள்ளது என்று கோடல் இயல்பானதாகவும் பொருத்த முடையதாகவும் தோன்றுகின்றது. அந்த வடிவத்தையே மேற்கூறிய பதிற் றுப் பத்தின் இருபுலவர்களும் தம் பாடல்களுள் ஆண்டுள்ளனர் என் பதனை எளிதாக உணர்தல் கூடும்.

இரு புலவர்களும் இச்சொல்லை நாடு என்னும் பொதுவான பொருளில்தான் பயன்படுத்தியுள்ளனர் என்பது முன்னரும் குறிக்கப்பட்டது. சேர இலக்கியத்தை ஆராய்ந்த தமிழ்ப் புலவர்கள் சேர மன்னர்களின் தாய உரிமை பற்றிய கருத்தில் வேறு பட்டு, சேர வேந்தர் ஏனைய சோழ பாண்டியர்களைப் போன்றே மக்கள் தாய மரபினராவர் (தந்தை வழி உரிமை இறக்கம் உடையவர்) என்றும் அவ்வாறின்றி மருமக்கட்டாயமரபினர் (தாய் வழி உரிமை இறக்கம் உடையவர்) என்றும் இருவகையினராகிப் பல ஆண்டுகள் வாதமிட்டுக் கட்டுரைகளும் நூல்களும் வெளிப்படுத்துவராயினர். அந்நிலைக்குக் காரணமாக அமைந்தவை பதிற்றுப் பத்தின் பதிகங்கள் சிலவற்றில் அமைந்த தொடர்களுக்குப் பொருள் காண்பதில் ஏற்பட்ட வேறுபாடுகளேயாகும்.

பண்டைச் சேர வேந்தர்களும் ஏனைய தமிழ் வேந்தர்களைப் போன்றே தந்தை வழி மைந்தன் அரசுரிமை பெறும் மக்கட்டாயத்

தினரேனரே என்னும் கருத்து இன்று பரவலாக ஏற்கப்பட்டுள்ளது. மக்கட்டாயத்தினரே என்னும் கருத்தினர் வெளியிட்டுள்ள காரணங் களோடு சேர்த்து எண்ணுதற்குரிய காரணமாகப் பைதிரம் என்னும் சொல்லின் சிறப்புப் பொருளும் அமைந்து அக்ககருத்திற்கு அரண் சேர்ப்பதாக உள்ளது. பைதிரம் என்னும் சொல்லாட்சி, நாடு என்னும் பொதுப் பொருளில் ஆளப்பட்டிருந்தாலும் சேரநாட்டுப் பகுதிக்கும், அன்றாண்ட சேர வேந்தன் பகைவர் நாடுகளான சோழ பாண்டிய நாட்டுப் பகுதிகளுக்கும் உரிய பொதுச் சொல்லாக அமைக்கப்பட்டி ருத்தலால் பண்டு சேர சோழ பாண்டிய மரபினரிடையே மக்கள் தாய உரிமை இறக்கமுறையே நிலவியது என்பதனை உறுதியாகக் கொள்ளலாம். அல்லாக்கால் சேர சோழ மரபினரிடையே மண உறவு இருந்தனைக் காட்டும் பதிகச் செய்திகளின் நம்பகத் தன்மைக்குப் பங்கம் ஏற்படவும் கூடும்.

ஒரு பகுதி மானிடமாகவும் மறு பகுதி விலங்காகவும் அமைந்த தொன்ம உருவினை நரமடங்கல் எனக்குறிப்பிட்டது போலப் பைதிரம் என்னும் சொல்லை பை + திரம் என்று கொள்ளாமல், பைதிரிகம் என்னும் வடதிசை மொழிச் சொல் ஒன்றின் திரிந்த வடிவமாகக் கொள்வது ஏற்புடையதாகும். அதனால் மூவேந்தர் அரசுரிமை பற்றிய சிக்கலுக்கு முடிவு காட்டும் சான்று ஒன்று கிடைத்ததுமாகும்.

இதுகாறும் பதிற்றுப்பத்தினுக்கு உரைவரைந்த சான்றோர் பலரும் (பழைய உரைகாரர்,(உ.வே.சா., ஔவை துரைசாமி முதலி யோர்) பைதிம் என்பதற்குப் பொதுவாக நாடு என்றே பொருள் கூறிச் சென்றுள்ளனர். அதற்கு ஆராய்ச்சி உரை எனும் பெயரில் விரிவான அரிய உரைவரைந்துள்ள ஈழத்துப் பேராசிரியர் சு.அருளம்பலவனா ரவர்கள் இச்சொல்லின் நுட்ப முணர்ந்து, சேரனுக்குரிய நாடு தந்தை

வழியில் வந்தமையின் அதனைப் பைதிரம் என்றார். பைதிரம் என்பது பைத்திரம் என்னும் வடமொழித் திரிபு என்று விளக்கியிருப் பதும் பாராட்டத்தக்கதாகும். பத்தொன்பதாம் பாடலில் இடம் பெறும் பைதிரம் எனும் சொல் சேரனின் பகைவர் நாட்டினைக் குறிப்பதனால் ஆண்டு இவ்விளக்கம் அளிக்காமல் சேர நாட்டைக் குறிக்கும் 38 ஆம் பாடற்கண் விளக்கமளித்திருப்பது சிறப்பாகவுள்ளது.

குறிப்பிட்ட ஒரு பொருளை உணர்த்தும் சொல் தமிழில் இருக்கவும், பிற மொழிச் சொல்லினைத் தமிழ்ப் புலவர்கள் பண்டு, தம் செய்யுட்களில் ஆளுதற்கான காரணத்தை விளக்குவதாகவும் இச்சொல் விளக்குகின்றது. இங்ஙனம் பிற மொழிச் சொற்களைக் கொள்ளுங்கால் தொல்காப்பிய ஆணை, தவறாது பின்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீட்டுநிலை எய்திய வாழைக்கனி

இரா.இளங்குமரன்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசியர் மு.அருணாசலம் பிள்ளை அவர்கள், முசிரிவட்டம் மேட்டுப்பாளையம் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் பா.நாராயணன் அவர்களால், இலக்கிய மன்ற விழாவுக்கு அழைக்கப்பட்டார். விழாவுக்குச் சென்று செவ்விதில் கடனாற்றி வழிச்செலவு மேற்கொண்டபோது , அருணாசலர்க்கு நாராயணர், வாழைபட்டையில் பொதிந்து, வாழைத்தார் ஒன்றையும் வழங்கினார். வாழை உயர்ந்த வகையது ; சுவையும் மிக்கது ; கனிவும் அமைந்தது. அக்கனியின் சுவை,அன்று அதனை உண்டார்க்கு மட்டும் உரிமையுற்றிருக்கும். ஆனால், அதனைப் பற்றிய சைவ சித்தாந்தச் செவ்வியல் ஆன்ம நேயச் சுவையை இன்றும் நாம் அறிந்து மகிழ,ஒரு கடிதமாகத் திகழ்கின்றது. கனியின் சுவைக்கு அளவும் காலமும் உண்டு ; பொருள் பொதிருந்த கடிதச் சுவைக்கு, இல்லையே. அதனைக் காண்க :

அன்புடையீர், நலம். அங்குத் தாங்களும் குழந்தைகளும் ஆசிரிய நண்பர்களும் பிறரும் நலமாக இருப்பீர்களென நம்புகிறேன்.

19.4.57. ஆம் நாள் வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் இங்கு நலமாக வந்து சேர்ந்தேன்.

தாங்களும் ஏனைய ஆசிரிய நண்பர்களும் என்பால் காட்டிய அன்பும் உபசாரங்களும் என்றும் நினைவு கூரத் தக்கனவாயிருந்தன.

அளவும் காலமும் உண்டு ; பொருள்
பொதிந்த கடிதச் சுவைக்கு . அவை 22.4.57

அன்பர்கள் எல்லோர்க்கும் எனது உள்ளார்ந்த நன்றியைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

உடன் உறையும் பிறதுறை ஆசிரியர்களையும், சிறந்த புலவர்கள் ஆக்கிவரும் தங்கள் திறமை பாராட்டற்குரியது. நீவிர் எல்லீரும் அளவளாவி மகிழும் நிலையைக் கண்டபோது,

" தவலரும் தொல் கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் " என்ற நாலடிச்
செய்யுள் என் நினைவிற்கு வந்தது . "இன்றே போல் நும் புணர்ச்சி " என வாழ்த்துகின்றேன்.

தாங்கள் அன்பு கனிந்துதவிய இன்பக்கனிகள்,முசிறி வந்தது முதல்,ஆணவமல பரிபாக மெய்திய மெய்யுணர்வுடையார் போன்று, குலைத் தண்டினின்றும் நெகிழ்ந்தது. மேலும், அவர்கள் மாயைத் திரையைக் கிழித்தெறிந்து வெளிப்பட்டு இருவினைக் கட்டினின்றும் விடுதலை பெறுதல் போல ,இவையும் தம்மை மறைந்திருந்த வாழைச்சருகைத் துளைத்து இருபுறத்து நார்க்கட்டினின்றும் விலகி விடுதலையடையத் தொடங்கின.இங்ஙனம், மூவகைப்பிணிப்பும், அற்று வீட்டுநிலை எய்திய கனிகளை,ஆங்காங்குள்ள அன்பர்கள் அவாவியேற்றுப் போற்றிப் பயன் பெற்றனர்.

அப்பால்,திருச்சிப் புகைவண்டியில் ஏறியபின்னர் " இம்மையே தன்னைச் சிக்கெனப் பிடித்தேன். எங்கெழுந் தருளுவ தினியே "என்ற மணிமொழியார் செயலை மேற்கொண்டு,எஞ்சியவற்றைச் *சிக்கென இறுக்கிக் கட்டிக் கொண்டு , இல்லம் வந்து கட்ட விழ்த்து நோக்கினேன்.அவையும் வீடுபெறக் " காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" யிருந்தன* ; பண்டை நிலையழிந்தவற்றை,மேலும் தாழ்த்து வைத்தல் நன்றன்றென எண்ணி, உடனே அயல்வீட்டுச் சிறார்களை யுழைத்துக்"கனிதந்தாற் கனியுண்ணவும் வல்லிரே " என அப்பர் அருளியாங்குக் கூறி அவர்கட்கும் வழங்கி மகிழ்வுற்றேன் . இவ்வாறு, சுவைபட நிகழ்ந்த செய்தி"செல்வத்துப்பயனேயீதல்,துய்ப்பேம் எனினேதப்புக பலவே"என்று ஆன்றோர் உரையை நினைவு படுத்திற்று .உங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் அவர்களுக்குத் தனியே கடிதம் எழுதியுள்ளேன். நன்றி.

அன்புள்ள,
மு.அருணாசலம்பிள்ளை
தமிழாசிரியர்
அண்ணாமலைநகர்.

அன்பு அச்சகம், மதுரை - 1.
தொலைபேசி : 741116